# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. DVC.4/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சரபோஜி | Prosecution | RW-1 Cross |
| Father Name | ராஜமாணிக்கம் | Court | JM, Court, Sirkali. |
| Village | கோயில்பத்து | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 49/2026 |

**Solemnly affirmed by Tmt. R. Geetha Grade –III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 17.04.2026.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கபட்ட திருமணம் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு மனுதாரர் தரப்பில் சீர்வரிசையாக 13 பவுன் தங்க நகைகள், ஹீரோ ஹோன்டா வண்டி, கட்டில் பீரோ, மற்ற சீர் ஜாமான்கள் செய்தார்கள் என்றால் 13.5 பவுன் எடை போட்டு பார்க்கவில்லை. சீர்ஜாமான்கள் செய்தார்கள். திருமணம் நடைபெற்று நானும் எனது மனைவியும் சேர்ந்து கோயில் பத்தில் உள்ள எனக்கு சொந்தமான கூரை வீட்டில் வாழ்ந்தோம். பின்பு புதிதாக வீடு கட்டி மாடி வீட்டில் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மணல் மேட்டில் வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 1996 முதல் தற்போது வரை வேலை செய்து வருகிறேன். எனது சம்பளம் சுமார் 60 ஆயிரம் இருக்குமா என்றால் இல்லை கடைசியாக வாங்கிய சம்பளம் 13 ஆயிரம் வாங்கினேன். எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். பெண் குழந்தை பெயர் லத்திகா, ஆண் பிள்ளை பெயர் ஸ்ரீசரண் ஆகிய இருவரும் எந்த பள்ளியில் படிக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

எனது மனைவி மற்றும் பிள்ளைகளை 2020 ஏப்ரலில் இருந்து பிரிந்து வாழ்கிறோம் என்றால் சரிதான். கடந்த 2020 ஏப்ரல் முதல் என் மனைவிக்கும் என் பிள்ளைகளுக்கும் எந்தவித ஜீவனாம்சமும்

கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் பெயரில் கோயில்பத்தில் உள்ள மாடி வீட்டினை என் தங்கை சபீதாவிற்கு செட்டில் மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். என் தங்கை சங்கீதா கணவர் 5ம் எதிர் மனுதாரர் தீபக் என்பவர் காவல் நிலையத்தில் வேலை செய்கிறார்என்றால் சரிதான். எனக்கும் எனது மனைவிக்கும் தகறாறு ஏற்பட்டு எத்தனை முறை சண்டை நடைபெற்று பிரிந்து வாழ்கிறோம் என்றால் 1 முறை பிரிந்து வாழ்ந்து வருகிறோம்.

நான் குடித்துவிட்டு என் மனைவி மற்றும் பிள்ளைகளை அடித்து கொடுமை படுத்தியதால் என் மனைவியும் என் பிள்ளைகளும் என் வீட்டை விட்டு வந்துவிட்டார்கள் என்றால் தவறு எனக்கு குடிப்பழக்கம் கிடையாது. நானும் என் மனைவியும் பிரித்து வாழ்ந்து வந்தபோது எனது மாமா ரங்கராஜ் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் சமரசம் பேசப்பட்டு இரண்டு முறை சேர்ந்து வாழ வைத்தார்கள் என்றால் சரிதான். எனது எதிருரையில் 3 பவுன் தாலி செயின், 2 கிராம் காசு, 4 உருப்படிகள், மற்றும் 2 கிராம்நாணல், 1 கிராம் குண்டு ஆகியவை மனுதாரர் எடுத்து போட்டு சென்றுவிட்டு கோயில் உண்டியலில் போட்டுவிட்டதாக மனுதாரர் கூறியதாக நான் எதிர் வழக்குரையில் வழக்கிற்காக கூறியுள்ளதை வழக்கிற்க்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் உண்டியலில் போட்டது உண்மை தான்.

எனது மனைவி என்னை விட்டு பிரித்து போன உடன் தனியார் பள்ளியில் சுமார் 6 மாத காலம் பணிபுரிந்தார் என்றாலும் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. நான் என் மனைவிக்கும் என் பிள்ளைகளுக்கும் சட்டப்படியான கணவர் மற்றும் தகப்பனார் என்ற முறையில் காப்பாற்ற வேண்டிய கடமை உள்ளது என்றாலும் அனைத்து ஜீவனாம்சமும் கொடுக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**